சுருக்கம்

பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணிகள் – திரு என். மகேசன், உதவி செயற் பொறியாளர் பணி மூப்பினை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நக3) துறை

அரசாணை (ப) எண். 242 நாள்:09.06.2008

படிக்கப்பட்டது:

1. திரு என். மகேசன், நகராட்சி பொறியாளர் ஆலந்தூர் நகராட்சி மனு நாள் 3.12.2007,
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 61056/07/எப்1 நாள் 22.12.2007.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண். 61056/07/எப்1 நாள் 13.05.2008.

------

**ஆணை:-**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட மனுவில் ஆலந்தூர் நகராட்சியில் பொறியாளராகப் பணியாற்றும் திரு என். மகேசன் தான் ஒரு பொறியியல் பட்டதாரி என்றும், உதவி செயற்பொறியாளராக (நகராட்சிப் பொறியாளர் நிலை –2) சென்னை மாநகராட்சியில் அயற்பணியில் மே 1996 முதல் ஏப்ரல் 2001 வரை பணியாற்றியதாகவும், நிர்வாகக் காரணங்களுக்காக நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு தற்போது ஆலந்தூர் நகராட்சியில், நகராட்சிப் பொறியாளராக பணியாற்றி வருவதாகவும், தான் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வில், சென்னை மாநகராட்சிக்கு அயற்பணியில் சென்றதற்கு எவரும் மறுப்பு அளிக்கவில்லை என்றும், அரசாணை (நிலை) எண். 1021, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.12.1988–ன்படி, 1998 – ஆம் ஆண்டு 3:1 என்ற விகிதத்தில், உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்றிருக்க வேண்டும் என்றும், ஆனால், தான் சென்னை மாநகராட்சியில் உதவி செயற் பொறியாளராக பணியாற்றுவதாக யூகித்து, தன்னுடைய பெயர் சேர்க்கப்படவில்லை என்றும், பணியில் தன்னைவிட இளையோர் மேற்படி பட்டியலில் சேர்க்கப்பட்டு உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தான் பதவியிறக்கம் செய்யப்படாமல், தாய்த் துறைக்கு திரும்ப அரசால் ஒப்படைக்கப்பட்ட பின்னர், சென்னை மாநகராட்சியில் தான் பணியாற்றிய ஐந்தாண்டு காலத்தினை கருத்தில் கொண்டு, உதவி செயற் பொறியாளராக பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தால், 1998 – ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர்களுக்கான பட்டியலில், இளைவராக சேர்க்கப்பட்டிருப்பேன் என தெரிவித்துள்ளார். எனவே தனது பெயரினை உதவி செயற் பொறியாளர்களுக்கான 11.10.2007–ல் வெளியிட்ட பணிமூப்பு பட்டியலில் வரிசை எண். 14–ல் காணும் திரு எஸ். வெங்கடேஷ் என்பவரது பெயருக்கு கீழேயும், தனக்கு பணியில் இளையவரான வரிசை எண். 15–ல் காணும் திரு ஆர். சுந்தரமூர்த்தி என்பவரது பெயருக்கு மேலேயும் வைத்து வெளியிடுமாறு கோரியுள்ளார்.

2. மேலே இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், அரசாணை (நிலை) எண். 1021, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5.12.88–ல் உதவி பொறியாளர்கள் பதவி உயர்விற்கு, இளநிலைப் பொறியாளர் நிலை –1 / நகராட்சிப் பொறியாளர் நிலை – 3 ஆகியோரிடையே, பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு (degree holders and diploma holders) 3:1 என்ற விகிதாச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், அரசாணை (நிலை) எண். 519, நிதி (ஊதியக் குழு) துறை, நாள் 11.05.1989 – ல் இளநிலைப் பொறியாளர் நிலை 1 (ம) 2 பதவி இளநிலைப் பொறியாளர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அப்பதவியுடன் ஒருக்கிணைக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அரசாணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.8.1992–ல் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணிகளில், பொறியியல் பட்டப்படிப்பு படித்த இளநிலைப் பொறியாளர்கள் உதவி பொறியாளர்கள் என பதவி–மாற்றம் செய்யப்பட்டனர் என்றும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதிகள் 1997–ன் படி 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவது கைவிடப்பட்டு 1999– ம் ஆண்டு முதல் பணிமூப்பு அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இவர் அரசு உத்தரவுப்படி, அயற்பணி அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வந்ததை முன்னிட்டு பணி மூப்பு பட்டியலில் இவருடைய பெயரை மறு நிர்ணயம் செய்து உத்தரவு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

3. ஆலந்தூர் நகராட்சியில் நகராட்சி பொறியாளராக பணியாற்றும் திரு என். மகேசன் அவர்களின் கோரிக்கையினை உரிய ஆவணங்களுடன் அரசு பரிசீலித்தது. திரு என். மகேசன் உதவி செயற்பொறியாளர் மே, 1996 முதல் ஏப்ரல் 2001 வரை சென்னை மாநகராட்சியில் உதவி செயற் பொறியாளராக பணியாற்றியதை கருத்தில் கொண்டும், அவர் மே 1998 – ல் பொறியியல் பட்டம் பெற்றுள்ளதாலும், தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி விதிகள் 1997–ன் படி 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவது கைவிடப்பட்டு 1999– ம் ஆண்டு முதல் பணிமூப்பு அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளதாலும், மேலும் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ளதன் பேரிலும், 1998ம் ஆண்டுக்கான பட்டியலில் 3 :1 என்ற விகிதாசர அடிப்படையில் உதவிப் பொறியாளர் பதவியிலிருந்து உதவி செயற் பொறியாளர் பதவிக்கு 11.10.2007 நாளிட்ட நகராட்சி

நிர்வாக ஆணையர் வெளியிட்டுள்ள செயல்முறை ஆணை எண். 4212/2006/எப்1 ல் உதவி செயற்பொறியாளர் பட்டியலில் முதுநிலைப் பட்டியலில் வரிசை எண். 14 ல் உள்ள திரு எஸ். வெங்கடேஷ் என்பவரின் பெயருக்கு கீழும் வரிசை எண். 15 ல் உள்ள திரு என். சுந்தரமூர்த்தி என்பவரின் பெயருக்கு மேலும் 14 (a) என்ற முதுநிலையில் வைத்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
திரு என். பகேசன், உதவி செயற் பொறியாளர், சென்னை – 600 016.
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
ஆணையர், ஆலந்தூர் நகராட்சி, ஆலந்தூர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை– 600 108.
நகல்
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2) துறை, சென்னை– 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்